பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 10 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏழாயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.
2. நாட்டில் புதிதாக பத்து இ எஸ் ஐ மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
3. வங்கிகள் கடன் வழங்கும்போது உரிய விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.
4. ஹரியானா மாநிலத்தில் மூன்றாவது முறையாக பிஜேபி-யும், ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணியும் ஆட்சி அமைக்கவுள்ளன.
5. இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று தில்லியில் நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏழாயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

புதுதில்லியிலிருந்து காணொலி வாயிலாக நடைபெறும் நிகழ்ச்சியில் நாக்பூர் பாபா சாஹேப் அம்பேத்கர் சர்வதேச விமான நிலையம், ஷீரடி விமான நிலையத்தின் புதிய ஒருங்கிணைந்த முனையம் உள்ளிட்ட திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

அனைவருக்கும் குறைந்த செலவில் சுகாதார சேவைகளை அளிக்கும் வகையில் மும்பை, நாசிக், ஜல்னா, அமராவதி உள்ளிட்ட பத்து இடங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகளையும் அவர் திறந்து வைக்கிறார்.

மும்பையில் டாடா குழுமத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்திய திறன் கழகத்தையும் திரு நரேந்திரமோடி தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி இரண்டு நாள் பயணமாக நாளை லாவோஸ் செல்கிறார்,

அந்நாட்டு தலைநகர் **Vientiane**—யில் நடைபெறும் 21-வது ஆசியான் - இந்தியா உச்சி மாநாட்டிலும், 19-வது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டுக்கு இடையே ஆசியான் நாடுகளின் தலைவர்களுடன் திரு நரேந்திரமோடி இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

[]<<<>>>[]

நாட்டில் புதிதாக பத்து இ எஸ் ஐ மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அடுத்த ஐந்து ஆண்டுகளில் புதிதாக 75 ஆயிரம் மருத்துவ இடங்கள் உருவாக்கப்படும் என்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் சுதந்திர தின உரைக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த மருத்துவமனைகள் அமைக்கப்பட உள்ளதாகக் கூறினார்.

இ எஸ் ஐ-யில் உறுப்பினர்களாக உள்ள பணியாளர்கள் ஆயூஷ்மான் பாரத் திட்டத்தி.ன் கீழ் சிகிச்சை பெறக்கூடிய அறிவிப்பையும் திரு மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.

[]<<<>>>[]

தேசிய நெடுஞ்சாலைகளில் பயணம் செய்வோரின் வசதிக்காக **Humsafar** கொள்கையை புதுதில்லியில் மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி நேற்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நெடுஞ்சாலைகளில் செல்வோர் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் பயணம் செய்யும் வகையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மற்றும் தூய்மையை அடிப்படையாகக் கொண்டு இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், மண் பாதுகாப்பு, கழிவுகள் மறுசுழற்சி போன்வற்றை கருத்தில் கொண்டு இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் திரு நிதின் கட்கரி தெரிவீத்தார்.

[]<<<>>>[]

வங்கிகள் கடன் வழங்கும்போது உரிய விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் வங்கிகள் ஆரோக்கியமான வகையில் செயலாற்ற வேண்டுமென்று கூறினார்.

கடன் வழங்குதல், வங்கிகளுக்கு லாபத்தை உருவாக்குதல், பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்து செல்லுதல் ஆகியவற்றில் வங்கிகள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

நவீன காலத்தில் இணையதளம் மூலமான சைபர் குற்றங்களிலிருந்து வாடிக்கையாளர்களின் பணத்தை பாதுகாக்கும் வகையில் அத்தகைய தொழில்நுட்பங்களில் வங்கிகள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

மாநில அரசுகள் தங்களின் மாதாந்திர நிதி வரவு செலவு கணக்குகளை ஒவ்வொரு மாதமும் 25-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்று மத்திய தலைமை கணக்கு தணிக்கையாளர் திரு கிரிஸ் சந்திர முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற மாநில நிதித்துறை செயலாளர்கள் மாநாட்டில் பேசிய அவர், நிதி தொடர்பான தகவல்களை வலுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் தேவையான பரிமாற்றங்களை மேற்கொள்வதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்த மாநாட்டில் மத்திய அரசின் நிதித்துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை எந்தவித தொய்வும் ஏற்படாத வண்ணம் செயல்படுத்திட வேண்டுமென்று அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று சென்னையில் தமது துறை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிக் கல்லூரிகளின் மாணவர் விடுதிகளின் நிர்வாகம், மாணவர்களுக்கு மதிவண்டிகள் வழங்கும் திட்டம், கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

ஹரியானா மாநிலத்தில் பிஜேபி-யும், ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணியும் ஆட்சி அமைக்கவுள்ளன.

இங்கு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

ஹரியானா மாநிலத்தில் மொத்தம் உள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், பிஜேபி 48 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை பெற்றுள்ளது.

காங்கிரஸ் 37 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

பிற கட்சிகள் ஐந்து தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.,

இதன்மூலம் ஹரியானாவில் பிஜேபி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க உள்ளது.

ஜம்மு-கஷ்மீரை பொறுத்தவரை மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணி 49 தொகுதிகளை கைப்பற்றி ஆட்சி அமைக்கவுள்ளது.

பிஜேபி 29 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

மக்கள் ஜனநாயகக் கட்சி மூன்று தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் திரு ஓமர் அப்துல்லா முதலமைச்சராக பதவியேற்பார் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ஃபரூக் அப்துல்லா அறிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஹரியானா மாநிலத்தில் பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க மக்கள் அளித்துள்ள வெற்றி ஜனநாயகத்துக்கும், அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும் கிடைத்த வெற்றி என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிஜேபி தலைமை அலுவலகத்தில் கட்சி தொண்டர்களிடையே அவர் உரையாற்றினார்.

ஹரியானா மாநில தேர்தல் வெற்றிக்காக உழைத்த அனைத்து தொண்டர்களுக்கும். வாக்களித்த மக்களுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வளர்ச்சி, நல்லாட்சிக்கு மக்கள் மீண்டும் வாக்களித்திருப்பதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

ஜம்மு-கஷ்மீரில் பிஜேபி-க்கு அதிக தொகுதிகளில் வெற்றியை வழங்கியதற்காக அந்த யூனியன் பிரதேச வாக்காளர்களுக்கும் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஹரியானா தேர்தல் முடிவு எதிர்பாராதது என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த தேர்தலில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு குறித்து காங்கிரஸ் கட்சி ஆய்வு செய்து அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று கூறியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணிக்கு வாய்ப்பு அளித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு சேவையாற்ற அளித்துள்ள வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி தங்கள் கூட்டணி அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும், அரசியல் அமைப்பு உரிமைகளை பாதுகாக்க உறுதிபூண்டிருப்பதாகவும் திரு மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

நேபாளத்தில் அண்மையில் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவிலிருந்து நான்கு புள்ளி இரண்டு டன் அளவுக்கு அனுப்பப்பட்ட நிவாரண பொருட்கள் காத்மண்டு சென்றடைந்தன.

கனமழை மற்றும் வெள்ளத்தால் ஏராளமான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான போர்வைகள், மாத்திரைகள், குடிநீர் பாட்டில்கள் உள்ளிட்ட உதவிப்பொருட்கள் இந்தியாவிலிருந்து நேபாள்கஞ்ச் வழியாக அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த நிவாரணப் பொருட்களை காத்மண்டு மாவட்ட தலைமை அதிகாரி திரு பிரசாத் பெற்றுக் கொண்டார்.

அடுத்த கட்டமாக மருந்து பொருட்கள் உள்ளிட்ட நிவாரண உதவிப் பொருட்கள் அனுப்பப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தில்லியில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணியை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக பிற்பகல் மணி 3-30-க்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் ஸ்காட்லாந்து – தென்னாப்பிரிக்க அணிகள் மோதுகின்றன.

நேற்று நடைபெற்ற நியுசிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 60 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்று முன்னிலை வகிக்கிறது.

**[]<<<>>>[]**

கஜகஸ்தானில் நடைபெறும் ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்திய மகளிர் அணி அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் தென்கொரிய அணியை மூன்றுக்கு - இரண்டு என்ற புள்ளி கணக்கில் இந்தியா வென்றது.,

இன்று நடைபெறும் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

***End of News***